

வேதாத்திரியப்
பார்வையில்
பாரதியாரின்
மானுட
சிந்தனைகள்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்
# பாரதியாரின் மானுடச் சிந்தனைகள்

## அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

**இதனுள்ளே**

1. மானுடம் போற்றிய மகான்கள்
2. கல்விச் சிந்தனைகள்.
3. பெண் முன்னேற்ற சிந்தனைகள்
4. குடும்பச் சிந்தனைகள்
5. குழந்தை வளர்ப்பு
6. சாதிகள் இல்லையடி பாப்பா!.
7. நான் வீழ்வே னென்று நினைத்தாயோ https://youtu.be/EVYRS1XLm5I
8. வறுமையை மாய்ப்பேன் https://youtu.be/VxmOaOFwSQw
9. .எத்தனை கோடி இன்பம் வைத்தாய் https://youtu.be/VPTrrKORqv8

## 1. மானுடம் போற்றிய மகான்கள்

பாரதியாரின் கவிதைகள் படிப்போர் உள்ளத்தை ஈர்க்கின்றன. சிந்தனையைத் தூண்டுகின்றன. அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றன. ஆன்மிக உணர்வு பொங்கச் செய்கின்றன.

வேதாத்திரி மகரிஷியின் மனவளக்கலையும் படிப்போர் உள்ளத்தையும் பயில்வோர் அறிவையும் ஈர்க்கின்றன.

சிந்தனையைத் தூண்டுகின்றன. அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றன. ஆன்மிக உணர்வு பொங்கச் செய்கின்றன.

இந்திய தேசிய இயக்கத்தின் காரணமாக நாட்டில் நிகழ்ந்த மறுமலர்ச்சியில் தோன்றிய கவிஞர்களுள் தலைசிறந்த பாரதியார் பற்றி வேதாத்திரி மகரிஷி நெகிழ்ச்சியோடு கூறுகிறார்.

- **உலகம் பாரதியை மிகச் சிறந்த அரசியல் அறிஞர் என்றுதான் கருதிக் கொண்டிருக்கிறது. அவர் மிகச்சிறந்த ஆன்மிகவாதி என்பதோ, தெய்வநிலை உணர்வு பெற்ற ஞானி என்பதோ பெரும்பாலோருக்குத் தெரியாது. பாரதியார் மட்டும் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்திருப்பாரேயானால் எனக்கு இந்த மண்ணில் வேலையே இருந்திருக்காது. இந்தத் தமிழகத்தை ஆன்மிகத்தில் திளைக்கச் செய்திருந்திருப்பார். இந்தியா உலகுக்கு வழிகாட்டும் என்ற அவரது கனவு அவராலேயே நனவாக்கப்பட்டிருக்கும்."**

பாரதியும் வேதாத்திரி மகரிஷியும் கிட்டத் தட்ட சமகாலத்தவர்கள்.

1. பாரதியின் 29 வயதில் மகரிஷி தோன்றுகிறார்.
2. பாரதியார் இவ்வுலகில் வாழ்ந்த காலம், 11.12.1882 – 12.09.1921. வேதாத்திரி மகரிஷி நிலவுலகில் நிலவிய காலம் 14.8.1911 – 28.03.2006
3. பாரதியும் மகரிஷியும் கவிஞர்கள் வரிசையில் வருபவர்கள்.
4. பாரதியும் மகரிஷியும் ஞானிகள் வரிசையிலும் வருபவர்கள்.
5. இருவரும் பிறவிக் கவிஞர்கள். இருவரின் கவிதைகளிலும் சொல் புதிது, பொருள் புதிது. புரிந்து கொள்வதும் எளிது.
6. பாரதி மக்கள் கவி. மானுடம் காக்கவந்த மாக்கவி. புது நெறி காட்டிய புலவன். கவிதைக்குப் புது வடிவம் கொடுத்தவன். பாரதி பாரம்பரியத்தில் வந்தவர் வேதாத்திரி மகரிஷி.
7. பாரதியும் மகரிஷியும் ஒருவகைச் சித்தர்கள்.
8. நாட்டுமக்கள் அடிமைத் தளையை உடைக்கப் பொங்கி எழுந்தவர் பாரதியார். ஆன்மாவின் அடிமைத் தளையை உடைக்க வீறு கொண்டு எழுந்தவர் மகரிஷி.

9. பக்தியில் தொடங்கி ஞானத்தில் முடிக்கிறார் பாரதியார். ஞானத்தில் தொடங்கி ஞானத்தில் தொடர்கிறார் மகரிஷி.
10. பாரதியும் மகரிஷியும் சமய சமரசவாதிகள்.
11. பாரதியும் மகரிஷியும் சமுதாய சீர்திருத்தவாதிகள்
12. பாரதியும் மகரிஷியும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மாற்றி புதிய சமுதாயத்தைப் படைக்க வந்த ஞானிகள்.
13. பாரதியும் மகரிஷியும் பெண் விடுதலைக்காகப் போராடியவர்கள்.
14. பாரதியும் மகரிஷியும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினர்.
15. பல தெய்வங்களைப் பற்றிக் பாடினாலும் பரம்பொருள் ஒன்றே என முடிக்கிறார் பாரதியார்.. பரம்பொருள் ஒன்றே என்று அழுத்தம் திருத்தமாக அறிவியல் பார்வையோடு பாடுகிறார் மகரிஷி.
16. பாரதியும் மகரிஷியும் பன்முக ஞானம் படைத்தவர்கள்.
17. பல செய்திகளை பாரதியார் முன்மொழிகிறார். மகரஷி அறிவியல் கண்ணோட்டத்துடன் அவைகளை வழி மொழிகின்றார்.
18. பாரதியும் மகரிஷியும் தமிழ்ப் பற்றாளர்கள்.
19. துவைத தத்துவத்தில் தொடங்கி அத்வைதத்தில் முடிக்கிறார் பாரதியார். அத்துவைதத்தில் தொடங்கிக அத்வைதத்தில் ஆழ்ந்து செல்கிறார் மகரிஷி.
20. செய்க தவம் செய்க தவம் என்றார் பாரதியார். தவம் செய்ய தவமுறைகளைப் பாடமாக்கி பயிற்சி கொடுக்கிறார் மகரிஷி.
21. பாரதி தத்துவங்களை வேதாந்தமாகப் பாடுகிறார். மகரிஷி அவற்றை எல்லாம் சித்தாந்தமாக்குகின்றார்.
22. பாரதியார் பாராட்டிய மூவர் – கம்பர் – திருவள்ளுவர் – இளங்கோவடிகள். மகரிஷி பாராட்டிய நால்வர் திருவள்ளுவர். திருமுலர், இராமலிங்க வள்ளலார், தாயுமானவர்.
23. பாரதியாரின கொடை – பாரதியார் கவிதைகள் மற்றும் பிற ஆக்கங்கள். மகரிஷியின் கொடை – வேதாத்திரியம்.
24. மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து–

இணக்கமாகி, இவர்களை ஓர் இணையற்ற கவிஞர்களாக ஆக்கியிருக்கின்றன.

25. எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவர்களது கவிதை வரிகளில் – மொழி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், உலக சமாதானத்திற்குமான உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.
26. பாரதியும், வேதாத்திரியும், தம் கவிதைக் கைகளால் இந்த தரணியைத் தட்டி எழுப்புவதைத் தலையாயக் கடமையாய்க கொண்டிருந்தனர்.
27. பாரதியும் வேதாத்திரியும், பிற்போக்குச் சக்திகளின் பிடரியைப் பிடித்து உலுக்கி, முற்போக்குக் கருத்துகளை முன் வைப்பவர்கள்.
28. பாரதியும், வேதாத்திரியும், துருப்பிடித்த வார்த்தைகளைத் தூரத் தள்ளி, சுறுசுறுப்புச் சொற்களுக்குச் சூடேற்றியவர்கள்!
29. இவர்களது கவிதைகளில் நிறுத்தக் குறிகள் கூட நெருப்புத் திரிகள். இவர்கள் கவிதைகள், சொற்களில் வடித்த சுடுசோறு, சமுதாயம் பசியாறும்.
30. எட்டயபுரத்துக் கவிஞன், தன் எழுதுகோலில் விட்டுவைத்த மையின் மிச்சத்தை, மகரிஷி தன் எழுதுகோலில் நிரப்பிக் கொண்டு முடித்து வைத்தார்.
31. ஒரு யுக விழிப்பை ஏற்படுத்துவதே இவர்களது இருவரது இலக்காக இருந்திருக்கிறது. ----அந்த முயற்சியிலே இவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.

இவ்வாறு பல ஒற்றுமையுடன் விளங்கும் மகான்கள் ”ஞாலம் போற்றும் மகான்களாக” போற்றப்படுகிறார்கள்.

காலம் சில மகான்களை மகாகவிகளை நிர்ணியத்தாற் போலவே, பாரதியையும் வேதாத்திரி மகரிஷியையும் நிர்ணயித்திருக்கிறது.

## 2. கல்விச் சிந்தனைகள்.

நாட்டில் கல்வியறிவு பெருக வேண்டும் என்பது பாரதியார் வேதாத்திரி மகரிஷியின் விருப்பமாகும். அதற்கு வேணடியவற்றை அவரவர்கள் காலத்திற்கேற்றவாறு செய்தனர்.

பாரதியார் காணவிரும்பிய சமுதாயத்தில் கல்விக்கென்று தனித்த இடமுண்டு. பாப்பா வயதில் இருந்தே கல்விப்பணி தொடங்குகின்றது.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா” (பாரதியார்)

என்று அக்குழந்தை எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாதென்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

கல்வியினைக் குறித்தத் தெளிவான கருத்தியலைக் கொண்ட பாரதி ஒரு தேர்ந்த கல்வியல் அறிஞராக, எதிர்காலத் தேவைகளைத் தொலை நோக்காக உணர்ந்து கல்வியியல் பாடத் திட்டங்களையும் செயல் நெறிகளையும் வரைந்துள்ளார். இவற்றின் வழி அவரது கல்வியியல் புலமை வெளிப்படுகிறது.

## ஏழைக்கு எழுத்தறிவித்தல்

அன்னசத்திரம் ஆயிரம் வைப்பதைவிட ஆலயங்கள் பதினாயிரம் கட்டுவதைவிட, ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் என்கிறார் பாரதியார்.

”இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
  இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
  ஆலயம்பதி னாயிர நாட்டல்
பின் ருள்ள தருமங்கள் யாவும்
  பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
  ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்” (பாரதியார்)

சத்திரம், சவாடி, கோயில், குளம் என்றே இரு ந்தவர் கள

பள்ளிக் கூடத் தர்மத்தைப் பற்றியும் சிந்திக்க வைத்தவர் பாரதியார்.

கல்விப் பணிக்கு அறிவுப்பணிக்குத் தாராளாமாக நன்கொடை வழங்குங்கள் என்று கேட்கிறார்.

"நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொலருளீர்!
ஆண்மை யாள ருழைபபினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நலகியிங் கெவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர்! (பாரதியார்)

**கல்விக்கு வேதாத்திரி மகரிஷி தரும் விளக்கங்கள்.**

ஒ ரு பொருள் பற்றிப் பல கருத்துக்கள் இருந்தால்தான் அப்பொருள் பற்றிய அனுமானம் தெளிவாகக் கிடைக்கும் என்பதால் கல்வி பற்றிப் பல கோணங்களில் கருத்துக்களை மகரிஷி ஆராய்ந்து அருளியுள்ளனர்.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ. விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை என்றார் சுவாமி விவேகானந்தர்.

இதையே வேதாத்திரி மகரிஷியும்,

" கல்வியெனில் எழுத்து தொழில் ஒழுக்கம் ஞானம்
கற்பதும் பின் வழுவாது நிற்பதும் ஆம்"

என்றும்

"எழுத்தறிவு தொழிலறிவு
இயற்கை தத்துவ அறிவு

ஒழுக்கப் பழக்கங்கள் இவை
    இழுக்கின்றி உணர்த்தும் முறையே கல்வி"

என்றும்

"வாழ வழிகாட்டி பயிற்சி
    வாழவைக்கும் சிறந்த செயல் கல்வியாகும்"

என்றும்

"இயற்கை அமைப்பை உணர்ந்து வாழ்வை நடத்தும் முறையறிந்து இனிமையாக வாழும் "அறிவாட்சி திறத்தை" உருவாக்கிய உயாத்திக் கொள்ளும் பயிற்சியே கல்வி"

என்றும், வாழ்வின் பல்வேறு நிலைகளில் இருப்போருக்கும் பொருந்தும் வண்ணம் கல்வியை வரையறை செய்கின்றார்.

**பயனுள்ளகல்வி முறை**

"பத்து வயதாவதற்குள் எழுத்துக் கல்வி
    பயிற்சி எல்லாக் குழந்தைகட்கும் முடியும்"

என்று கல்வி கற்கும் காலம் 20 ஆண்டுகள் என்ற கணக்கில் முதல் 10 அண்டுகளை இலவசக் கல்வியாம் குழந்தைக் கல்விக்கு ஒதுக்குகிறார்.

"எக்கல்வியால் வாழ்வை இனிதாக்கி உளத்தி லெழும்
அக்கேள்விகட் கெல்லாம் அறிவு விடை கண்டிடுமோ
இக்கல்விதான்..."

சிறந்த கல்வி என்று கல்விக்கு இலக்கணம் வகுத்து

"சிந்தனையை, செயல்திறனை, பண்படுத்தும் பயிற்சி உடலுக்கும்
அறிவுக்கும் ஊட்டும் பயனுள்ள கல்வி
முறை வகுக்க வேண்டும்."

என்று சிந்தனையைத் தூண்டி,

"விவசாயம். துணி நெய்தல், வீடுகட்டுதல்,
விஞ்ஞான இயந்திர நுட்பம், சமையல் செய்தல்
தவறாமல் அனைவருக்கும் கட்டாயமாக
தக்க வயதிருபதுக்குள் கற்க......."

வேண்டும் என்று அடுத்த பத்தாண்டின் கல்வித் திட்டத்தை தருகிறார்.

ஊர்தோறும் தொழிற்கல்வி, அதனோடு உடற்பயிற்சி, விளையாட்டு உற்ற துணையாய் நிற்க, இவ்விருபது வயதறிகுள்ளாக ஆன்மீக மேம்பாடு, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல் ஆகியனவும் சேர்ந்திட வேண்டும் என்று முழுக்கல் வி யி ன முறைகள் வகுத்துள்ளார்.

## 3. பெண் முன்னேற்ற சிந்தனைகள்

பாரதி இந்தியப் பெண்களின் நிலையை எண்ணியே கவிதை பாடினான். அதனால் அது உலகப் பெண்களின் மேன்மைக்குத் துணை செய்தது.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழ்வோம் இந்த நாட்டில்" என்றான் பாரதி. இன்று முப்பத்து மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு அரசியல் சட்ட ரீதியாகக் கிடைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை இந்திய நாடாளுமன்றததில் வலிமையாக எழுப்பப்பட்டு வருகிறது.

பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சமமாகப் பணியாற்ற வேண்டும் என்று விரும்பினான் பாரதி,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி" (பாரதியார்)

என்று பாடிய பாரதியின் சிந்தனை தான் இன்று இந்தியத் திருநாட்டின் பிரதமர் பதவியிலிருந்து குடியரசத் தலைவர் பதவி வரை பெண்கள் அழகு சேர்த்து வருகின்றனர்.

"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா
என்றும் வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா,

பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணுமாயிற் பிறகொரு தாழ்வில்லை" (பாரதியார்)

-என்று பாரதி பெண்ணியச் சிந்தனையின் முன்னோடியாகத் திகழ்கின்றான்.

இவை பெண்மை நலங்காக்கும் இன்றை சூழலில் ஏற்புடையவையே ஆகும்.

பண்டைக் காலத்தில் பாரத நாட்டில் பெண்களுக்குப் பெருமதிப்பு இருந்தது.

பெண்கள் சமூகத்தில் சமநிலையடைய அவர்களுக்கு முறையான கல்வி ஒன்றே வழிவகுக்கும் என்பதில் பாரதி தீவிர சிந்தனை உள்ளவராக விளங்கினார்.

## பெண்ணுரிமை இயக்கம்

ஆசியாவில் பெண் விடுதலைக்காகப் போராடிய சீனநாட்டு சியூசீன் என்ற பெண்ணைப் புகழ்ந்து அப்பெண் இயற்றிய பெண்ணுரிமை இயக்கப் பாடலைத் தமிழாக்கம் செய்தார்.

புதுச்சேரியில் கூடிய மகளிர் கூட்டத்தில் தம் மகள் சகுந்தலா பாரதியைக் கொண்டு அந்தப் பாடலைப் பாடச் செய்தாராம். (**பாரதியும் சமூகச் சீர்திருத்தமும், பக்: 122**) அப்பாடலில்,

விடுதலைக்கு மகளிரெல்லோரும்
வேட்கை கொண்டனம்;
(பல்வகைப் பாடல்கள், பெண்விடுதலை - 1)

என்று பெண்கள் விடுதலை மீது விருப்பம் கொண்டதாகப் பாடியிருக்கிறார்.

மண்ணுலகில் உள்ள உயிர்கள் எல்லாம் கடவுள் என்றால் பெண்ணும் தெய்வம் அல்லவா? என்று கேட்டு அவளைத் தெய்வமாக மதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்,

மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்

மனையாளும் தெய்வ மன்றோ? (பாரதியார்)

பெண் உரிமையைப் பற்றி வேதாத்திரி மகரிஷி ஒரு கவியில் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"ஒரு ஆண் தன் பால்வேட்கைத் தீர்த்துக் கொள்ள,
  உதவும் ஒரு கருவியாய் உடல் கொடுக்க,
ஒரு பெண் தன் உயிரையே அர்ப்பணித்து,
  உணவு உடை வாடகை போல் பெற்றுலாவும்
ஒரு இழிந்த அடிமைநிலை பெண் இனத்திற்கு
  உலகினிலே இனி வேண்டாம், ஒவ்வோர் பெண்ணும்
ஒரு தொழிலைச் செய்து பொருள் ஈட்டிக் காத்து
  உண்டுடுத்துக் கடமை செய்யும் உரிமை வேண்டும்" (ஞா.க.545)

என்று பெண்ணுரிமைப் பற்றி **மகரிஷி** விளக்குகிறார்.

பெண்மையின் மதிப்பை உணர்ந்து, டெல்லியில் போய் சதிக்கு "சதி" செய்தவர் மகரிஷி.

## பெண்ணின் பெருமை

" பெண் வயிற்றில் உருவாகிப்
  பெண் பால் உண்டே வளர்ந்தாய்
பெண்ணின் துணையால் வாழ்கின்றாய்
  பெண்ணின் பெருமை உணர்" " (ஞா.க.543)

என்று மகரிஷி பெண்ணின் பெருமையைப் பாடுகின்றார்.

## பெண்கள் பிரம்மாக்களே.!

இந்த உலகத்தில் வாழுகின்ற மக்கள் எல்லோரும் பெண்ணித்தின் அன்பளிப்பு என்றால் அது மிகையாகாது என்பார் மகரிஷி.

மனித இனத்தில் பெண் இன்றி ஆண் கிடையாது. இருவரும் சமம். பெண் என்பவள் ஆணை விட உயர்ந்தவள் ஆவாள்.

இறைவானால் கொடுக்கப்பட்ட இனப் பெருக்கம் செய்யும் பேறு பெண்ணினத்திற்கு மட்டுமே உரியதாகும். "தாயிற் சிறந்ததோர்

கோயிலுமில்லை” என இறைவனுக்கு இணையாகப் போற்றப்படுகிறாள்.

எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திரு உள்ளமென்ன?
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்,
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே!
வாழுகின்ற மக்களில் இவ்வளம் அறிந் தோர் எத்த னை பேர்”
(ஞா.க .1647)

## உண்மையான துறவிகள்.

ஒரு பெண் திருமணமான பிறகு கணவன் வீட்டிற்கு வருகின்றபோது பெற்றோர்களைத் துறக்கிறார். பிறந்த ஊரினைத் துறக்கிறார். பெற்றோர்கள் வீட்டிலிருக்கக் கூடிய எல்லாப் பொருட்களையும் துறக்கிறார். இதை எல்லாம் துறந்துவிட்டு கணவன் வீட்டுக்கு வருகிறாள்.

இந்தத் துறைவவிட இதுவரை எந்த இடத்தில் யார் மேற்கொண்ட துறவு அதிகமாக இருந்து விடமுடியும்?

அத்தகைய துறவிகளையே எல்லாரும் மனைவிகளாகப் பெற்றிருக்கிறார்கள்.

கணவர் நலத்திற்காக பெண்கள் அர்ப்பணித்து ஒத்துழைக்கத் தயாராக வந்து விட்டார்கள். இதை உணர்ந்து கொள்ள வேண்டியது ஆண்களின் கடமை என்கிறார் மகரிசி.

## சிறப்பானவர்கள்

அன்பு என்பது ஒன்றிணைத்துக் கொள்ளும் மனப்பான்மையைக் குறிக்கும். அந்த மனப்பான்மையில் பெண்களுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும்.

பெண்கள் ஆணுக்குச் சமம் அல்லது உயர்வு என்றேல்லாம் கருத்துக் கொள்ள வேண்டும்.

ஆண்களுக்குப் பெண்கள் சமம் அல்லது உயர்வு என்றெல்லாம் இல்லை.

அதேபோல ஆண்களுக்குப் பெண்கள் உயர்ந்தவர்களும் இல்லை. ஆண்களுக்குப் பெண்கள் சமமானவர்களும் இல்லை.

இயற்கை அமைப்பில் பெண்கள் சிறப்பானவர்கள். முதன்மையான மதிப்பு உடையவர்கள் என்பதை உணர்ந்து மதித்து ஒவ்வொரு ஆணும் நடந்து கொள்ள வேண்டியது என்று மகரிஷி.

## மனைவி நல வேட்பு நாள்.

உலகமெங்கும் இன்று முதியோர் தினம், குழந்தைகள் தினம், அன்னையர் தினம், நண்பர்கள் தினம், காதலர்கள் தினம் எனக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இவையனைத்தும் உறவை வலியுறுத்திக் கொண்டாடப்படும் விழாக்களாகும். ஒவ்வொரு ஆடவனின் வெற்றிக்குப் பின்னாலும் மனைவி நிற்கிறாள். இதனை உணர்ந்தவர் மகரிசி.

பெண்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் "மனைவி நல வேட்பு நாள்" நடத்த வேண்டியது அவசியம் என்பதை வேதாத்திரி மகரிசி வலியுறுத்துகிறார்கள்

மனவளக்கலை மன்றங்களில் ஆகஸ்டு 30 ஆம் தேதிமனைவி நல வேட்பு நாள் இன்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அப்போது கணவர் ஒரு கவியைச் சொல்லி மனைவிக்கு ஒரு புச்செண்டை கொடுக்கிறார்.

பதிலாக, மனைவி ஒரு பழத்தை அன்புடனே கணவருக்கு அளிக்கிறாள்.

பெண்மையின் பெருமையை ஆண்கள் உணர்ந்து. மதித்து நடந்து கொள்ளவெண்டும் என்ற உயரிய நோக்கில் மனைவியை நோக்கி கணவர் பாடுகிறார்.

## மனைவி நலம் நாடி வாழ்த்துதல்

"பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப்
 பிரிந்து வந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்ற

பற்றற்றத் துறவியெனக் குடும்பத் தொண்டு ஏற்று
பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்க் கொண்டேன்.
நற்றவத்தால் என் வாழ் க கைத் துணையாகிப் பெண்மை
நலநோக்கில் அன்போடு கருணையிவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன். வாழ்த்தி மகிழ்கின்றேன்."
(ஞா.க.704)

இதன் மூலம் பெண்ணினத்தின் மாண்பை அனைவரும் உணர்ந்து கொள்ள நல்லதொரு வாய்ப்பு அமைகின்றது.

# 4. குடும்பச் சிந்தனைகள்

குடும்பம் என்பது குழந்தைகளுடனோ குழந்தைகள் இல்லாமலோ அமைந்த, கணவன் மனைவி என்ற உறுதியான ஒரு பிணைப்பு அல்லது ஓர் ஆண், ஒரு பெண் தனியாகக் குழந்தைகளுடன் கூடி வாழ்வதாகும் என்று ஒக்பர்ன் என்ற சமூகவியவல் அறிஞர் விளக்குகிறார்.

**குடும்ப வாழ்வே சிறந்தது என்கிறார் பாரதியார்.**

*கடவுளுக்கு கடமை இருக்கிறது. அதனால் அவரும் கர்மயோகியாக இருக்கிறார்.

*மற்ற வாழ்க்கையைக் காட்டிலும் குடும்ப வாழ்வே சிறந்தது..

**குடும்பம் என்பதற்கு மகரிஷியின் அளவுகோல்**

சிந்திக்கும் ஆற்றலுள்ள மக்களெல்லோரும் "தெய்வ நிலை, உயர் நிலை, அறிவு, உழைப்பு இரண்டின் மதிப்பு, இ வ் ற றை உணர்ந்து வாழ்ந் தால், மகிழ்ச்சியோடும் அமைதியோடும் வாழலாம்.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், அவர்கள்தான் குடும்பம், சுற்றம், ஊர். உலகம் எனும் ஐவகைக் கடமைகளையும் முறையாக ஆற்றினால் தனி மனிதன் வாழ்வும் சமுதாய வாழ்வும் இன் மய மாகவே இருக் கும்" என்கின்றார்.

**இல்லறம், துறவறமும்**

இல்லறம், துறவறமும் என்னும் இந்த இரண்டின் எது பெரியது என்ற விவாதம் இன்றளவும் நடந்து வருகிறது.

இதற்கு விடை தருமுகமாக, இல்லறம் பெரிதா? துறவறம் பெரிதா? என்ற வினாவை எழுப்பிக் கொண்ட **பாரதியார்** இல்லறமும் துறவறமும் ஒன்றுதான் என்பதை விடையாகத் தருகின்றார்.

- இல்லறத்தில் வாழ்ந்தால் இப்படிப்பட்ட தைரியத்ததுடன் வாழ வேண்டும். மணமாலையே பாம்பாக வந்த விழுந்த போதி லும் மன ம் பத றக் ச டா து. தைரியம் பாம்பைக் கூட மணமாலையாக மாற்றிவிடும். இவ்விதமான தைரியத்துடன் இல்லறத்தில் நிற்பார் வீடு பெறுவர். துறவறத்துக்கும் இதுவே வழி. அகவே இரண்டும் ஒன்றுதான்" (பாரதியும் சமுகமும். ப 122)

"அச்சங்கள் இல்லாமல் விதுதலைப்பட்ட வாழத்தகுந்த இட தக் கு வீடு என்ற பெயர் கொடுத்தனர்" என்றும் "குடும்பம் நடத்துவதற்கு நிலைக்களனாய் அமையும் வீடு அன்பும் அரவணைப்பும் உள்ள இடமாக இருத்தல் வேண்டும்" என்று சொல்லுகிறார் பாரதியார்.

இத்தன்மைகள் இல்லாத போது வீடு நரகமாகின்றது என்பதை புலப்படுத்துகின்றார்.

ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்த நினைக்கும் போதே வீட்டின் இன்பம் கெடுகிறது என்கிறார்.

- "வீடு துயரிடம் ஆவதற்குக் காரணம் விடுதலையும் அன்பும் இல்லாமையே வீட்டில் அண்ணன் தம்பிகளையும் தாய்தந்தையரையும் அக்கா தங்கைகளையும் பெண்டு பிளளைகளையும் அடிமைப்படுத்தி ஆளச் சதிசெய்யும் ஜனங்களின் கூட்டங்களே தேசங்களையும் அடக்கி அடிமை ஆக்கி ஆளச் சதி செய்கின்றன." (பாரதியார் கட்டுரைகள்)

"இல்லறமும் துறவறமும் இணைந்த ஒரு நல்லறமே எனக்கும், வருங்கால உலகுக்கும் நலமென முடிவு செய்து கொண்டேன்" என்கிறார் **வேதாத்திரி மகரிஷி**.

"உறவிலே கண்ட உண்மைநிலைத் துறவு" என்ற கொள்கையுடையவர் **வேதாத்திரி மகரிஷி**,

## குடும்ப உறவு

இல்லறத்தில் இருக்கும் உடன்பிறந்தோர் ஒவ்வொருவரும் தங்களுக்குள் பாசப்பிணைப்பு உடையோராக இருக்க வேண்டும், இருப்பர், என்பதை வெளிக்காட்டும் **பாரதியார்**, இவ்வுலகத்தில் பிறந்த மக்களைனைவரையும் உடன்பிறந்தவர்களைப் போலக் கருதுதல் வேண்டும் என்கிறார்

தம்பி தன் செயற்பாடுகளில் குன்றி மெலிந்து போனேயானால் அவனை அண்ணன் அடிமை கொள்ளலாமா? கொள்ளுதல் கூடாது என்பதை.

"உடன்பிறந்தவர்களைப் போல-இவ்
    உலகினில் மனித ரெல்லாம்
திடங்கொண்டவர் மெலிந்தோரை-இங்குத்
    தின்று பிழைத்திட லாமோ...
மெலிவு கண்டாலும் குழந்தை-தன்னை
    வீழ்த்தி மிதித்திட லாமோ
தம்பி சற்றே மெலிவானேல்-அண்ணன்
    தானடிமை கொள்ள லாமோ" (பாரதியார்)

என்ற கவிதையில் தெரிவிப்பரர்.

அடுத்து குடும்பத்தில் பிள்ளைகளைச் சிறப்போடும் தன்னம்பிக்கையோடும் நல்ல முடிவுகளை எடுக்கும் திறனோடும் சுறுசுறுப்போடும், ஒழுக்கத்தோடும். நல்ல பண்பாட்டோடும், உயரிய சிந்தனைகளோடும் வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் கடனாகும்.

- இன்சொல், வெடுவெடுப்பில்லாமை, சிறிய துன்பங்களால் மனக்குழப்பம் அடைந்து விடாதிருக்கும் திறமை, மற்ற உயிர்களுக்கு இயன்றவரை துன்பமேற்படுத்தாமலிருக்க வேண்டுமென்ற ஆசை என்பவை இருக்குமானால் எத்தனையோ நன்மை உண்டாகக்கூடும். தாய் தந்தையர்கள் தமது குழந்தைகளுக்கும் சிறுபிராய முதலே அவ்வித நற்குணங்கள் ஏற்படுமாறு பழக்க வேண்டும்." (பாரதியார் கட்டுரைகள்)

மனையியலில் முக்கிய கூறாக விளங்குவது குடும்ப உறவாகும். குடும்ப உறவுக்கு மிகவும் ஆதாரமாக இருப்பவள் மனைவி.

குடும்ப உறவை வளர்த்தெடுக்க வேண்டுமாயின் மனைவிக்குக் கணவன் நன்கு மதிப்பளிக்க் வேண்டுமென்பது **வேதாத்திரி மகரிஷியின்** கருத்தாகும்.

## உணவுமுறை

மனையியலில் மிக முக்கியமாகக் கொள்ளப்படுவது உணவுக் கோட்பாடாகும்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்" (பாரதியார்)

என்ற பாரதி, பசியினை அனுபவித்தவர். உயிர்க் கொடுமை அது ஒன்றே என்பதை நன்கு அறிந்ததினால் இதனைப் பாடலில் எழுதியவர்.

உரைநடையிலும் இவ்வுலகச் செயற்பாடுகளைக் கூறி அதனை விடுத்து இதனைக் கைக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார்.

உணவுக் கோட்பாடு பற்றிய வேதாத்திரி மகரிஷியின் சிந்தனை தனிச்சிறப்புடையது.

உடல் நலத்திற்கு உணவு இன்றியமையாது என்பதோடு மனிதனுடைய எண்ணங்களும் சிந்தனைகளும் அவன் உண்ணும்

உணவின் மூலம் வெளிப்படுகின்றதென்பது வேதாத்திரி மகரிஷியின் கருத்தாகும். இதனை அவர்,

"உண்ணும் உணவு உடல் மட்டும் பாயும்
எண்ணும் எண்ணங்கள் எங்குமே பாயும்
எண்ணமோ உணவில் எழுச்சிபெறும் இயக்கமே
உண்பதோ எண்ணத்தால் உற்றுப்பார்! உறவையறி!" (ஞாக.பா.321)

என்று குறிப்பிடுகிறார்.

## 5. குழந்தை வளர்ப்பு

மனையியலில் குழந்தை வளர்ப்பு ஒரு முக்கிய கூறாகும்.

"ஒரு குழந்தையின் உற்பத்தியானது பெற்றோர்களுடைய உடல், உயிர், அறிவு இவற்றின் தரத்திற்கு ஏற்றவாறுதான் அமையும்.

பெற்றோர்களுடைய வினைத் தொடரே குழந்தை. நல்ல குழந்தை வேண்டுமானால் பெற்றோர்கள் உடலை, உயிரை, அறிவைச் செம்மையாகப் பேணிக் காக்க வேண்டும்.

தவம், உடற்பயிற்சி ஆராய்ச்சி இவற்றால் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

அமாவாசை, பௌர்ணமி தினங்களிலும் போதைப் பொருட்களை உட்கொண்ட மயக்கத்திலும், இருவரில் ஒருவர் வருத்தமாகவோ, நோயுற்றோ இருக்கும் நாளில் ஒரு குழந்தை கருத்தரிக்கு மேயானால், அது உடலிலும், அறிவிலும், தரம் குறைந்ததாகவே அமையும்.

மேலும் குழந்தை கருவுற்றிருக்கும் காலத்தில் தாயின் மனம் உற்சாகமாக இருக்கும்படி அந்தக் குடும்பத்தினர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய அறிவின் விழிப்பில் உற்பத்தியாகும் குழந்தை, உடல் அறிவு நலன்களோடு, குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பெரும்

நலம் விளைக்கத்தக்க நல்நிதியாக அமையும்.

பிறந்த பிறகும் வளர்க்கும் முறையில் மிகவும் எச்சரிக்கையோடிருக்க வேண்டும்.

அந்தக் குழந்தை எந்த எந்தச் செயலில் ஈடுபடக் கூடாது என்று நினைக்கிறோமோ, அந்தச் செயல்களைப் பெற்றோர்கள் குழந்தையின் எதிரில் செய்யவே கூடாது.

கடைசியாக மக்களுக்குச் சொத்து சேர்த்து வைக்க வேண்டும் என்பது இந்த விஞ்ஞான காலத்தில் அவசியமில்லை.

அவர்களுக்கு, வாழ்வதற்கு ஏற்ற கல்வியை கற்பித்து வைத்தால் அதுவே அழிக்க முடியாத பெரும் சொத்தாகும்." என்கிறார் - தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

பெற்றோகள் குழந்தைகளை எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும் என்பதை அட்டவனையாகப் பாடியுள்ளார் பாரதியார்.

ஓடி விளையாடு பாப்பா, - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா, - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

சின்னஞ் சிறுகுருவி போலே – நீ
திரிந்து பறந்துவா பாப்பா,
வண்ணப் பறவைகளைக் கண்டு – நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா, - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா;
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது

மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும்நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மைஆடு, - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா – ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

பாதகஞ் செய்பவரைக் கண்டால் – நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

துன்பம் நெருங்கிவந்த போதும் – நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்த தெய்வ முண்டு – துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா, - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங்குழந்தை நொண்டி, - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற – எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா, - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே, - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா;
செல்வம் நிறைந்த ஹிந்து ஸ்தானம் – அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

வடக்கில் இமயமலை பாப்பா – தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா,
கிடக்கும் பெரியகடல் கண்டாய் – இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

வேத முடையதிந்த நாடு, - நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு,
சேதமில் லாதஹிந்து ஸ்தானம் – இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

சாதிகள் இல்லையடி பாப்பா; - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்; - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்; - இது
வாழும் முறைமையடி பாப்பா." (பாரதியார்)

**வேதாத்திரி மகரிஷி குழந்தை வளர்ப்பு பற்றிப் புதிய சிந்தனைகளைச் சமுதாயத்திற்குத் தருகின்றார்.**

வீடு, நாடு, சமுதாயம் என்ற மூன்றும் உயர வேண்டுமானால் குழந்தைகளைப் பெற்றோர்கள் வளர்த்தல் கூடாது என்பது அவரது புதிய சிந்தனையாகும்.

பெற்றோர்கள் குழந்தைகளை வளர்த்தால் அக்குழந்தைகளுக்கு சாதி, மதம், மொழி இவற்றிலே பேதங்களை மட்டுமே அவர்கள் கற்றுக் கொடுப்பார்கள்.

அதனால், குழந்தைகளுக்குச் சமத்துவ உணர்வு ஏற்படாமல் போகின்றது.

எனவே, உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் சான்றோர்களான அறிஞர்கள் வளர்க்கும் நிலை உருவாக்கப்பட வேண்டுமென்ற புதிய மனையியற் சிந்தனையை மகரிஷி குறிப்பிடுகின்றார்.

”பெற்றோரே குழந்தைகளை வளர்த்தல் இந்தப்
  பேருலகில் எங்கெங்கும் பழக்கமாச்சு
பெற்றோர் களிடமிருந்தே வேண்டாச் செய்கை
  பிள்ளைகட்குப் பலபடியும் சமத்துவம் கிட்டா
பெற்றோரால் சாதி மதம் மொழி இவற்றால்
  பேதங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து நிற்கும்
பெற்றோர்தம் மக்கள்தமைச் சமுதாயத்தின்
  பேரறிஞர் வளர்க்க விட உலகம் சீராம்.” (ஞா.க.430)

என்று குறிப்பிடுகின்றார். இந்த நிலை உருவாகினால் சமுதாயத்தில் இன, மத, ஜாதி, வேறுபாடு நீங்கும் என்பது அவரது கருத்தாகக் காணப்படுகிறது.

# 6.சாதிகள் இல்லையடி பாப்பா!

**ம**னிதர்களிடையே காணப்படும் பாகுபாடு வேற்றுமையை வளர்க்கின்ற சாதி, இன வேற்றுமையை இயேசு, நபிகள், புத்தர், இராமானுஜர், சித்தர்கள், வள்ளலார், தாயுமானவர், முதலான ஆன்றோர்கள் பலர் முயன்றுள்ளனர்.

இந்த வரிசையில் பாரதியார் சாதி சிந்தனைகள் சற்று வித்தியாசமானதாக அமைந்துள்ளது.

ஆனால், வேதாத்திரி மகரஷியோ சாதி ஒழிய தேவையானத் திட்டங்களை முன்மொழிந்து புதிய வரலாற்றினைப் படைத்துள்ளார்.

**பாரதியாரின் சாதி ஒழிப்பு.**

சாதி பிரச்சி னை  களப் பற்றிய பாரதியின் சிந்தனைகளை ஆராயப் புகுமுன், பாரதி ஓர் உயர்சாதி இந்து என்ற நிலையில் அவர் வெளிப்படுத்திய சிந்தனைகள், சமூகம் சார்ந்த சிந்தனைகளையும் மீறி அவர் வெளிப்படுத்திய சிந்தனைகள் ஆகிய இரண்டையும் மனதில் கொள்ள வேண்டும்.

பாரதியாருடைய நடை , உடை, பாவனைகளில் செயல்களில் வாழ்க்கையில் சாதி வேற்றுமை கருதாமை முதலிய பல சீர்திருத்தங்களைக் காணலாம்.

அவருடைய பாடல்களில், கதைகளில், கட்டுரைகைளில, கார்ட்டுன்களில் பத்திரிக்கை எழுத்துகளில் சாதி வேற்றுமையை கண்டிக்கும் இடங்கள் பல பல.

"சாதிகள் இல்லையடி பாப்பா; - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

குழந்தைப் பருவத்திலேயே சாதிகள் இல்லை என்பதைச் சொல்லிக் கொடுத்துவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

"ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே – அன்றி
வேற குலத்தின ராயினு மொன்றே."

என்று  ஜாதி மதங்களைப் பாரோம், வேதியராயினும் ஒன்றே. வேறு குலத்தினராயினும் ஒன்றே என்று பாடுகிறார்.

பாப்பாப் பாட்டிலேயே சாதி ஒழிப்பைப் பாடிய பாரதியார் குடுகுடுப்பைக்காரன் பாட்டிலேயும் சாதி ஒழிப்பை வலியுறுத்துகிறார்.

"குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்லகாலம் வருகுது.  நல்லகாலம் வருகுது.
சாதிகள் சேருது. சண்டைகள் தொலையுது.

சொல்லடி, சொல்லடி, சக்தி. மாகாளி
வேதபுரத் தாருக்கு நல்லகுறி சொல்லு.”

## ஜாதிப்பிரஷ்டம்.

பாரதியார் அனைத்து சாதியினருடனும் சமபந்தி போஜனம் செய்தார். தெரு ஓரங்களில் விற்கும் தின்பண்டங்களை வாங்கி உண்டார். முஸ்லீம் கடைகளில் தேநீர் பருகினார்.

வர்ணாசிரம தர்மத்ததைக் கடைப்பிடிக்காத பாரதியாரின் மீது மற்ற பிராமணர்கள் எரிச்சலடைந்தனர். சாதியை விட்டும் ஊரைவிட்டும் அவரை தள்ளி வைத்தனர். அக்கிரகாரத்துக்கு வெளியே ஒரு தனிவீட்டில் பாரதியார் குடியிருந்தார்

.

தான் எழுதியதை பாடியதை செயலிலும் செய்து வாழ்ந்து காட்டியவர் பாரதியார்.

### வேதாத்திரி மகரிசியின் சாதீய ஒழிப்பிற்கான தீர்வுகள்.

சாதியைப் பொறுத்தவரையில் மகரிஷியின் பார்வை வித்தியாசமானது. நிரந்தரத் தீர்வை அளிக்க வல்லது.

இயற்கையானது மனிதன் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அளிக்கவல்ல ஒரு கருவூலம்.

வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைப் பொதுவுடைமை ஆக்குவதால் உலகில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு தோன்றாது.

அனைவரும் பொருளாதார நிறைவு பெற்று பொதுத்தொ ண்டில் ஈடுபடுவர்.

பொருட்களையும். வாய்ப்பு நலங்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் கட்டாயம் கல்வியைக் கற்பித்து கற்றவர்களாக்க வேண்டும்.

பின்னர் தொழில் நுட்ப அறிவிலும் பயிற்சி அளிக்க வேண்டும்.

தவிர்க்க முடியாத தேவைகளை இயற்கை தோற்றுவித்தால் ஒழிய, ஒரு மனிதன் பிறரின் உழைப்பையும், பணத்தையும் சுரண்டிப் பிழைத்து வாழக்கூடாது என்கிறார் வேதாத்திரியார்.

சமுதாயத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் சொத்தைச் சமமாக பங்கிட வேண்டும் என்று பொது உடமை தத்ததுவவாதிகள் எண்ணுவதற்குப் பதிலாக ஒவ்வொரு தனிமனிதனும் அவனைச் சமுதாயத்தின் சொத்தாக கருத வேண்டும் என்கிறார் மகரிஷி.

"செல்வர்களே ஆட்சியினை ஆளும் மட்டும்
  சீர்திருத்தம் பொருள் துறை யில் மலர மாட்டா
செல்வர்களோ டேழைகளும் கலந்து ஆள
  செழித்துவரும் நாடு பொருள் மிகுதியாகும்
செல்வர்களின் அடிமைகளாய் அழைப்போர் வாழும்
  சீர்கேடு மாறிவிடும் சுரண்டல்போகும்
செல்வமிலார் என்ற ஒரு தனித்த சாதி
  சில நாளில் மறைந்து விடும் சமமே எல்லாம்." (ஞா.க.186)

செல்வமும் ஆதிக்கமும் வளர்ந்தபின் சாதியமைப்பில் இப்புல்லுருவிகள் சேருகின்றனர். இதனால் இயல்பாய் இயங்கும் சாதியம், சிக்கலாய் மாறி மானுட நேயத்தைச் செயலிழக்கச் செய்கின்றன.

தனியார் சொத்து தளர வேண்டுமாயின் சமூகம் பொருள் உற்பத்தியைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்தல் இன்றியமையாதது. இச்சாதி பேதங்கள் மறைய,

"குலமுதலாய் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும்கூடி உழைத்து. பகிர்ந்துண்டு வாழ்ந்திடுவோம்.
உலகில் பிறந்துவிட்ட ஒவ்வொர் மனிதனுக்கும்
நிலஉலகம் சொந்தம் என்ற நீதிநிலை நாட்டிடுவோம்." (ஞா.க.357)

என்கிறார்.

இதைப் போல் தொழில் துறையின் நிர்வாகத்தை சமுதாயம் ஏற்க வேண்டும். இவ்விதம் செய்தால் வேலையில்லாமல் துன்புறும் நிலைமை வராது. மேலும் தரங்குறைந்த பொருள்களும் சந்தைக்கு வராது.

நான்கு வருணத்தார் நம் சமூகத்தில் இல்லை என்று வேதாத்திரியார் கூறவில்லை.

ஆனால் வருண அமைப்பிலே உண்மையில்லை என வருந்துகிறார். எனவே. அவர் உண்மையான தொழிலாளர் (உண்மையான வருணத்தார்) அமைப்பு வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

"உழைப்பாளர் வாணிபர்கள் ஆட்சியாளர்
உள்ளமெனும் அறிவறிந்தோர் பிரிவு நான்கும்
உழைப்பாளர் படிப்படியாய் உயர்தற்கேற்ப
ஒன்றாய்ப்போம் கூட்டுறவு முறையின் மூலம்
உழைப்பாளர் வாணிபத்தை ஏற்றுக் கல்வி
உயர்வு பெற்றுப் பின் அரசை ஏற்பர் மேலும்
உழைப்பாளர் உள்ளுணர்ந்து அறிவறிந்தால்
ஒன்றல்லே மனித இனம் பேதமெங்கே? (ஞா.க 293.)

என்பது மேற்கூறிய கருத்துக்கு வலுவுட்டுவதாக அமைந்துள்ளது.

சாதி ஒழிப்பிற்கு பாரதியார், அம்பேத்கார் போன்றவர்கள் சமூக அணுகுமுறையில் பேராடினார்கள். அதனால் ஒரளவிற்குத்தான் பயன் கிடைத்தது.

முழுமையான பயன் கிடைக்க வேண்டுமானால் வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகின்ற பற்றற்ற குடும்ப, சமூக வாழ்க்கையை நடைமுறையில் கொண்டுவர வேண்டும். இந்த சீரிய கருத்தே சாதி ஒழிப்பிற்கு மகரிஷி வைக்கும் உயர்ந்த திட்டாகும்.

"இனம் சாதி தேசம் மொழி மதம் பற்றற்று
இயற்கை யமைப் பறிவு நிலையறிந்து மேலாம்
மனிதனென்ற ஒரு நினைவில் பாசம் பற்றை
மறந்து தொண்டாற்றி பிறர் துன்பம் தீர்க்கும்
புனித உள்ளம் செயலுடையோர் எண்ணிறந்தோர்
புவிமீது அதிகரிக்க அதிகரிக்க
கனிவு மிகும் அருள் பெருகும் சமுதாயத்தின்
களங்கங்கள் மறைந்துவிடும் உலகம் உய்யும் " (ஞா.க.339)

சாதி ஒழிய வேதாத்திரியத்தின் புதுமைக் கருத்து சொல்கிறார்.

"சமுதாயப். பொருட்கள் உற்பத்தி யேற்று
தக்கபடி நிர்வகித்தால் தனியார் சொத்தேன்?
சமுதாயம் குழந்தை வளர்ப்பதனை ஏற்றால்
தரம் பிரிக்கும் சாதி, பரம்பரைச் சடங்கேன்?
சமுதாயம் தொழில் துறையை நிர்வகிக்கத்
தனியார்க்கு வேலையில்லாத் தொல்லையேது?
சமுதாய வாழ்வின் நலங்ககுலைக்க ஏற்ற
தரம் குறைந்த பொருள் தோன்ற வாய்ப்பு ஏது? (ஞா.க.303)

இச்சமுதாயமே குழந்தை வளர்ப்பு ஏற்க முன்வருதல் புதுமையான கருத்து. நடைமுறைக்கு வர ஒவ்வாதது அல்ல.

குழந்தைகளிடம் சாதியற்ற சமுதாய உணர்வை ஊட்டினால் அவ்வுணர்வு வேரூன்றி வளரும். விபரம் அறியாத குழந்தையிடம் சாதி என்ற பண்பினை முளையிலேயே கிள்ளி விடலாம் அல்லவா?

"வேதமத, ஜாதி இன, வேறுபாட்டை
வேரோடு போக்கி உலகெங்கும் மக்கள்
சோதரர்களாய் ஒன்றுபட்டு வாழ
சுருக்குவழி, குழந்தைகளைப் பயன்படுத்தல்"

என்பதன் மூலம் உணர்த்துகிறார்.

**சாதி என்பது ஒழிக்க முடியாதது அல்ல. அதனை ஒழிக்க ஒரு கருத்தைத் தெரிவித்தல் அதன் செயல்பாட்டிற்குத் திட்டம் வகுத் தல், பயன் பாட்டைத் தெளிவு செய்தல் வேதாத்திரியத்தின் தனிச்சிறப்பாகும்.**

என்று வேதாத்திரிய கவிதை சொல்கிறது. எவ்வளவு சிறப்பான திட்டமானாலும் தனிமனிதன் மட்டும் புரிந்து கொண்டால் போதாது.

அத்திட்டத்தை சமதாயமும் அறிந்து கொண்டால்தான் முழுப் பயனைப் பெற முடியும். பாமரனுக்கும் அதன் பயனை கொண்டு செல்ல இயலும்.

## 7. பல வேடிக்கை மனிதரைப் போலே

மனிதனின் சிறப்பு உலகிலுள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிறந்த மேலான ஒரு இயக்கநிலை மனித உருவம்.

எல்லாம் வல்ல இறைநிலையை முழுமையாக எடுத்துக்காட்டும், பிரதிபலிக்கும் கண்ணாடி மனிதனே.

உடலுக்குள் உயிர், உயிருக்குள் அறிவு, அறிவுக்குள் அருட்பேராற்றலின் இயற்கை [மெய்ப்பொருள்].

இவ்வாறு ஒன்றில் ஒன்றாக நிலைகொண்டு மனித உரு சிறப்பாக, வியத்தகு முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

உடல் குறிப்பிட்ட அளவு பருமனால் எல்லை உடையது.

உயிரானது நுண்ணியக்க மூலக்கூறான விண் எனும் நுண்துகள்கள் கோடிக்கணக்கில் ஒன்றிணைந்து ஒரு தொகுப்பாக இயங்கும் ஆற்றல்.

இந்த உயிரானது உடலுக்குள் சுருங்கவும், உடலுக்குப் புறத்தே தக்க அளவு விரியவும் கூடியது.

அறிவு என்பது உயிரை மையமாகக் கொண்ட மெய்ப்பொருள்.

உடல் மூலம் ஆற்றிய வினைகளினால் பெற்ற அனுபவம், சிந்தனை, கற்பனை இவற்றிற்கேற்ப விரிந்தும், சுருங்கியும் செயல்புரியும் ஆற்றலுடையது.

அறிவில் அடங்கியுள்ள இரகசியங்கள் எண்ணி அறிய முடியாதவை. எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான மெய்ப்பொருள் உயிராற்றலை மையமாகக் கொண்டு தனது அசைவினாலும், உணர்வாலும் ஆற்றிய வினைப்பதிவுகள் அனைத்தும் அடக்கம் பெற்ற கருவூலம் அறிவு ஆகும்.

இது உயிர்த்துகளின் மையத்தில் தொடங்கி உயிர்த்துகள் தற்சுழற்சியால் விளையும் ஜீவகாந்த சக்தி மூலம் உடல் வரையிலும் மேலும் உடலுக்கு வெளியே புலன்கள் மூலம் உணரும் பொருட்கள் வரையிலும் யூகத்தால் பேரியக்க மண்டலம், அதற்கப்பால் நிலைத்த சுத்தவெளி எனக் கருதப்படும் மெய்ப்பொருள் வரையிலும் விரிந்து சுருங்கும் இயல்புடையது.

- எல்லாம் வல்ல மெய்ப்பொருளே சுத்தவெளியாகவும்,
- மெய்ப்பொருளாகவும் விண் முதல் மண் வரையிலான பஞ்ச பூதங்களின் இணைப்பால் ஆகிய பேரியக்க மண்டலத் தோற்றங்கள் அனைத்திலும் இயக்க ஒழுங்காகவும்,
- உயிர்களிடத்தில் புலனுணர்வாகவும்,

- மனிதனிடத்தில் எல்லாமாக இருக்கும்,
- தன் முழுமையை உணரும் பேரறிவாகவும் இருக்கிறது.
- இந்த நான்கு தத்துவங்களும் ஒன்றிணைந்த மாபெரும் வல்லமையுடைய அறிவிலும், செயலிலும் சிறந்ததோர் உருவம் மனிதன்."

தேடிச் சோறு நிதந் தின்று
பல சின்னஞ் சிறு கதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பல செயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி
கொடுங் கூற்றுக் கிரை யெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத்தாயோ? (பாரதியார்)

இந்த பாடல் வரிகளில் தான் எத்தனை வீரியம்! இந்த மண்ணுள்ள காலம் வரை நம் நினைவிலிருந்து விலகாத கவிஞர் நம் பாரதி. தமிழ் மொழியின் தனித்துவத்தை சுவைபட மட்டுமல்லாமல் சுவாரஸ்யத்துடன் விளக்கிய மாபெரும் கவிஞர் சுப்பிரமணிய பாரதியின்

பல்லாண்டு காலமாக தொன்மையின் தோள்களில் அடைக்கலம் பெற்ற தமிழ் இவரால் தான் புத்துணர்ச்சி பெற்றது.

தம் கவிதையின் மூலம் தமிழ் மொழியின் இனிமையை உணர்த்தியதோடு புரட்சிக்காக தமிழ் மொழியை பயன்யடுத்திய வெகு சில கவிஞர்களில் பாரதியும் ஒருவர்.

"கத்தி முனையை விட பேனா முனைக்கு வலிமை அதிகம்" என்பதை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்திய ஒரு மாபெரும் கவிஞர் பாரதி..

பல வேடிக்கை மனிதர்கள் போல வாழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? பிறப்பின் நோக்கம் அறிந்து வாழ வேண்டும் என்கறிது வேதாத்திரியம்

ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும்.

இயற்கையின் முழுமையை உணர வேண்டும், எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி, வந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

இதுதான் பிறப்பின் நோக்கம். (This and this alone is the purpose of life).

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக்கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி, தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும். பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்பந்தம்). இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம்.

இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது, பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது. முறையான பயிற்சி வேண்டும்.

விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும். அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும். வாழ்க வளமுடன்.

## 8. வறுமையை மாய்ப்பேன்
### (கொடிது இளமையில் வறுமை)

"கொடியது கேட்கின் நெடியவெல் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை" (பாரதி யார்)



பாரதி வறுமையில் வாழ்ந்தவன்.

வறுமையையே வாழ்க்கையாகக் கொண்டவன்.

அதனால் மண்ணில் யார்க்கும் வறுமை என்பதில்லாம் செய்வேன் என்கிறார்.

"மண்ணில் யார்க்கும் துயரின்றிச் செய்வேன்
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்" (பாரதியார்)

"வயிற்றுக்குச்சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதருக்கெலாம்!
பயிற்றிப் பல கல்வி தந்து
இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்!" (பாரதியார்)

## வேதாத்திரி பார்வையில் வறுமை என்பதுஇல்லை.

அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம்,
மூன்று வகையிலும் அறிவு வறுமை நிலவுகிறது"

வேதாத்திரி மகரிஷி தனது நெடிய பயணத்தில் வாழ்க்கை நெறிகளை அமைதியாக உணர்த்திச் செல்கிறார்.

விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பொருள் வறுமை இல்லவே இல்லை என்கிறார்.

அறிவு வறுமையால், நிரவி வாழாமல் பொருட்கள் தேக்கமும், அவசியமற்ற பொருட்களின் பெருக்கமும், அவசியமான பொருட்கள் மீது அலட்சியமும் ஏற்பட்டப் பொருள் வறுமை போன்ற ஒரு மாயத் தோற்றம் உருவாகி நிலைத்து வருகிறது.

தெய்வ நிலை அறிவால் ஏன் இந்த நிலைகளைச் சீர்திருத்தி உலக மக்கள் வாழ்வில் வளத்தை ஏற்படுத்தக் கூடாது?

தெய்வத்தை அறிந்து கொண்டால், பல நன்மைகளை உலகுக்குச் சாதித்து விட முடியும். தெய்வ நிலையை உணர்ந்த பிறகுதான் உண்மை விளங்கும்.

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான தெய்வமானது கேட்டால் எதையும் கொடுப்பதில்லை. செய்யும் செயலுக்கு ஏற்றபடித்தான் விளைவைக் கொடுக்கிறது.

நோக்கம், திறமை, காலம், இடம், தொடர்பு கொள்ளும் பொருள் அல்லது நபர் இவ்வைத்துக்கும் ஏற்ப, ஒவ்வொரு செயலிலும் தக்கபடிச் சிறிது கூடத் தவறாத நீதியோடு விளைவைத் தெய்வம் கொடுக்கிறது.

ஆகவே இந்தத் தெய்வ நியதியைக் கொண்டு மக்கள் குலத்திற்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

எனவே. பொருள் வறுமை என்பது கிடையவே கிடையாது. அறிவு வறுமைதான் இருக்கிறது. இதை ஒழித்தால் போதும் பொருள் வளம் மிகுந்துவிடும்.

ஏழையாக இருப்பது பாவமன்று. ஏழ்மையைத் துன்பமாக, துயரமாக வளர்த்துக் கொள்வது தீது.

“சோம்பேறியாக இருந்தால் வறுமைதான் கிட்டும்"

சோம்பலால் வறுமையில் வாடிய ஒருவன் ஒரு மகானைச் சந்தித்து, தனது வறுமையைப் போக்கும்படி வேண்டினான்.

அவனது சோம்பலை உணர்ந்த அந்த மகான் அவனுக்கு அதை உணர்த்த ஒரு கதையைக் கூறினார் -

ஒரு மரங்கொத்திப் பறவை, தன் கூரிய அலகால் டொக் டொக்கென்று மரத்தைக் கொத்திக் கொண்டே அந்த மரத்தின் மேல் தாவித் தாவி ஏறியது. அதைப் பார்த்த ஒரு மனிதன், ""மூடப் பறவையே, எதற்காக மரம் முழுவதையும் கொத்திக் கொண்டிருக்கிறாய்? இது வீண் வேலையல்லவா?" என்று கேட்டான்.



அதற்கு அந்தப் பறவை, ""மனிதனே நான் என் உணவைத் தேடுகிறேன். தேடினால் கிடைக்கும்..." என்றது.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, தொடர்ந்து மரத்தைக் கொத்தி, மரத்தில் ஓட்டை போட்டு, அதற்குள் பதுங்கியிருந்த புழுக்களை எடுத்து உண்ண ஆரம்பித்தது.

தனது உணவைச் சாப்பிட்டு முடித்த பிறகு, அந்த மனிதனைப் பார்த்து, ""மனிதனே, நீயும் தேடு... மரத்திலும், மண்ணிலும்,

நீரிலும் ஏன் எல்லா இடங்களிலும் தேடு. உனக்கும் ஏதாவது கிடைக்கும்" என்றது.

கதையைச் சொல்லி முடித்த மகான், ""நீயும் இந்தப் பரந்த உலகத்தில் தேடு. உனக்கும் ஏதாவது கிடைக்கும். சோம்பேறியாக இருந்தால் வறுமைதான் கிட்டும்" என்றார்.

ஏழ்மையில் காரணத்தை அறிந்து கொண்டால் அறிவார்ந்த நிலையில் மாற்ற முயற்சி செய்தல் ஏழ்மை மாறும்!.

முயன்றால் ஏழைகளால் எதையும் செய்ய இயலும். ஏழைகளால் செய்ய இயலாது என்ற ஒன்று இ ய ல்லை.

பாரதியாரும்,

”கஞ்சி குடிப்பதால் கில்லார் – அதன்
காரணங்கள் இவை யெனும் அறிவு மிகல்லார்”

என்று கூறியது போல், இன்றைய ஏழைகள் கஞ்சியில்லாமல் இருப்பதற்குரிய காரணத்தை அறிந்து கொள்வில்லை.

அறிந்து கொள்ளாதது மட்டுமன்று, தங்கள் ஏழ்மைக்குக் கடவுளும் விதியும் காரணம் என்று பிழை படக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது முற்றிம் தவறு.

அண்ணல் இராமபிரான், இலக்குவன் அமைத்த பர்ணசாலையைக் கண்டு வியந்த போது,

**“தா இல் எம்பிகை சாலை சமைத்தன**
**யாவை, யாதும் இலார்க்கு இயையாதவே.”** (கம்பன்-2095)

நமது நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு இந்தத் துணிவு வரவேண்டும். வரவழைக்கப்பட வேண்டும். அன்றே நமது நாடு வளரும் .

இந்த நாட்டில் ஒவ்வொரு மனிதனும் தற்சார்படைய பொருளாதார வசதி பெறுதல் வேண்டும். சார்ந்து வாழ்தல் தீது.

சுரண்டும் பொருளாதரச் சமுதாயம் அறவே கூடாது. நாடும் வளத்துடன் வளர வேண்டும். அந்நிய மூலதனத்தின் சந்தை நாட்டின் வளர்ச்சிக்கு உதவாது.

சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு இல்லை. அந்நிய மூலதனம் ஊளைச் சதை போலத்தான். ஆதலால், கம்பனின் கருத்துப்படி ஏழ்மை அழிவுக்குரியதல்ல. ஆக்கந்தரும் உந்து சக்தி என்பதை உணர வேண்டும்.

வேதாத்திரியம் (2) பொருள் துறையில் சமநீதி:

"வீடு தொழிற்சாலை விளைநிலம் வியாபாரம்
விஞ்ஞான இயந்திரங்கள் ஆட்சி பீடம்
பாடுபடும் மக்கட்குப் பொதுவாய் ஆக
பலபடியில் கூட்டுறவு முறை வகுத்து
நாடு வளம் பெற்றுலகத் திணைப்பைக் கொண்டு
நல் வாழ்வு கிட்டுவதற்கு ஏற்றவாறு
ஈடு இணையற்ற ஒரு திட்டம் வேண்டும்
இம் முறையே மக்களுக்கு நலம் பயக்கும்." (வேதாத்திரியம்)

வறுமை ஒழிய விவசாயம் வளர வேண்டும்
தொழில்கள் வறுமையைப் போக்கும்
கல்வியால் வறுமையை போக்கலாம்
வறுமையைப் போக்க சுரண்டல்களை ஒழிக்க வேண்டும். வறுமையை ஒழிக்க பன்முக உத்திகள் தேவை
பொருள் வறுமை – அறிவு வறுமை இல்லை.
வறுமையற்ற வளமான வாழ்வு இந்த வையகம் பெற வேண்டும்.
வாழ்க வளமுடன்

# 9.எத்தனை கோடி இன்பம் வைத்தாய்

நாம் மட்டும் ஏன் இப்படி வாழ்கிறோம்? பல நேரங்களில் சகமனிதர்களின் புலம்பல்கள் புதிராய் இருக்கின்றன.

மணித்துளிகளைப் பணித் துளிகளாகவும், பணத் துளிகளாகவும் மாற்றி வாழ்ந்தது போதும்.

மனத்துளிகளை ரசிக்கவும் இனி நம் காலத்தைச் செலவிடலாமே. ஒரு சிறு நலம் விசாரிப்பு, ஒரு சிறு புன்னகை, ஒரு சிறு உதவி என மலர்ச்சி மயமாக்கலாமே!

உயிரோடிருத்தல் மட்டுமே வாழ்தலின் அடையாளமாகாது. புன்னகையோடு தொடங்கும் நாள் மலர் மணத்தோடு இரவில் உறங்கச் செல்கிறது.

கவலை மறந்த மனங்களில்தான் இறைவன் இருக்கிறான் எப்போதும். மகத்தான மானுட சமுத்திரத்தில் தோன்றி இயந்திரங்களைப்போல் எதற்காக நாம் ஆகவேண்டும்?

சிறு துன்பங்களுக்கு எதற்கு மனம் உடைந்து உயிரை மாய்த்துக் கொள்ளவேண்டும்?

- எத்தனை கோடி இன்பம்
- அழகான வண்ண மலர்கள்,
- நிலம் பார்த்து இறங்கும் ஆலம் விழுதுகள்,
- அதில் தொங்கி ஆட்டம்போடும் அன்புக் குழந்தைகள்,
- பசுமையான வயல்கள், கிணற்றில் அடிமண் தேடும் சிறுவர்கள், அற்புதமான வரப்புகள்,
- வானை எட்டும் உயரமான மருத மரங்கள்,
- அழகான குளக்கரைகள்,
- அசையும் அழகுச் சிற்பங்களாய் அழகான ஆடுமாடுகள்,
- பஞ்சாரத்தை விட்டுக் கொக்கரித்து வெளியேறும் கோழிகள்,
- அதன் உடன் உறையும் அழகான கோழிக் குஞ்சுகள்,
- கொய்யா மரத்திலிருந்து பயத்தோடு மிளகுக் கண்களால் எட்டிப் பார்க்கும் அணில் குஞ்சுகள்,
- பசுஞ்சாணி மெழுகிய மண் வீடுகள்,
- வைக்கோற் போரில் தலை நுழைக்கும் கன்றுக்குட்டிகள்,
- பூவரச இலையில் செய்த பீப்பிகள்,
- நோண்டித் தின்றாலும் நொடியில் விழாது ஓடும் நுங்கு வண்டிகள்,
- மார்கழி மாதத்துப் பனித்துளி,
- சித்திரை மாதத்துக் கத்தரி வெயில்,
- கசந்த காலத்தை மறக்கவைக்கும் வசந்தகாலம்,
- ஆண்டின் முதல்மழை, குட்டிக் குழந்தையின் முத்தம்,
- வானொலியில் வழிந்தோடி வரும் பழைய மனம் கவர் பாடல்கள்,
- மண் பானைத் தண்ணீர்,
- ஓலைக் குடிசை வீடுகள்,
- பழைய சோறு,
- அம்மாவின் அன்பு,
- நிலாப் பார்த்த நிமிடங்கள்,

இவற்றை எல்லாம் ரசிக்கும்போது எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா! என்று சப்தமாய் பாடத்தோன்றுகிறது.

தாகூரின் ரசனை கவிஞர்கள் எப்போதும் ரசனையின் ரசிகர்களாகவே

திகழ்கின்றனர். நோபல் பரிசு பெற்ற கீதாஞ்சலியில், தாகூர் இந்த இனிய வாழ்வைக் கொண்டாடுகிறார்.

இறைவனை வெகு நெருக்கத்தில் வைத்துப் பார்க்கிறார். திருவருளை நோக்கிய ஆன்ம பயணத்தை அவர் கவித்திறனோடு காட்சிப்படுத்துகிறார்.

"என் இலக்கான உன்னைத் தரிசிக்க நான்சுற்றித்தான் வரவேண்டியிருக்கிறது" என்கிறார்.

அவரது விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தில் இயற்கையே பாடம், ரசித்தலே கற்றல். தாகூரின் மழைக்காலக் கவிதையில் நனைகின்றன அவரது எல்லா எழுத்துகளும் குடையின்றி!

- வெள்ளைச் சலவை மொட்டாய் பவுர்ணமி நிலவில் ஒளிரும் தாஜ்மகாலை யாரேனும் ரசிக்காமல் இருக்கமுடியுமா?
- தம் வீட்டில் தவழும் குழந்தைகளின் இனிமையான மழலைமொழி கேட்டவர்கள் இனிமையான இசைக் கருவிகளின் இசையை உன்னதமானதென்று கூறுவார்களா?

யாவற்றையும் இனிமையாய் ரசிக்கப் பழகுங்கள்.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா இறைவா இறைவா! (பாரதி பா.)

## பேரின்ப ஊற்று – வேதாத்திரியம்

இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா –
எங்கும் இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா!
அன்பும் கருணையுமாய் அனைத்து உயிர்களூடும்
இன்ப ஊற்றாய் அறிவாய் இயங்கும் பராபரமே. (இன்ப ஊற்றாய்)

எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து
ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், (இன்ப ஊற்றாய்)

உண்மை நிலை மறந்து உணர்வு தன்முனைப்பாகி,
எண்ணம் 'தான்' 'தனது' என்று இறுகிக் குறுகி நின்று
மண்ணைப் பொன்னை மென்மேலும் மாறிமாறி நினைந்து
கண்ணும் கருத்தும் தீய காமம் புகாமல் என்னுள் (இன்ப ஊற்றாய்)

உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின

உடலுள் உயிராய் என்னை உயர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க... (இன்ப ஊற்றாய்)

வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் என்றன் வினை மறந்தேன் இறைவா!
எனை மறந்தேன் ஆனால் நீ உள் நிறைந்து எனை மீட்டு" (ஞா.க.பா.1646)

இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த மெய்ப்பொருளாகிய இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பும் கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

மெய்யடியார்களுக்குப் பேரின்பமாகி அமுத ஊற்றாய்ப் பீறீட்டு கொண்டுள்ளது மெய்ப்பொருள் என்கிறார் தாயுமானவர்,

பேரின்பம் என்றால் என்ன? வேதாத்திரியம் அழகாக பேரின்ப ஊற்றான மெய்ப்பொருளை அடையாளம் காட்டுகிறது.

அதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்பதைக் குறிக்க பேரின்பம் என்கிறோம்.

ஊற்று என்பது குறைவில்லாமல் தொடர்ந்து வந்து கொண்டேயிருப்பது. இன்பமானது நீடித்தும் நிலைத்தும் இருப்பது ஆகும்.
மன அலைச் சுழலானது குறைந்து அறிவு என்ற நிலைக்குப் போகும்போது. தன்னையே எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் தனக்குள்ளேயும் காண்கின்ற அகத்துணர்வு ஏற்படும்.

பேரின்பம், பேரானந்த நிலையாகும். இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பும் கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

பரம் என்றால் அதைவிடப் பெரிதும் நுண்ணியதும் இல்லை. இணையானதுமில்லை என்பதாகும். அதனையே பேரறிவு என்கிறோம்.

பிரபஞ்சமாகி எண்ணிலடங்காத கோள்களிலே, நில உலகமும், சீவ இனங்களுமாகி தொடர்ந்து வழிவழியாக வாழ்வதற்கு வாய்ப்புகளையும் நிரப்பி வைத்து, ஓய்வு இல்லாமல், அகமும் புறமுமாக, அழிவில்லாத பேரறிவாக எல்லாவற்றிலும் இருந்து இயக்கி. காத்து, முடித்தும் வைக்கிறது.

இந்த உண்மைகளை எல்லாம் மறந்த மயக்க நிலையில் தன்முனைப்பின் காரணமாக அழிந்து போகக்கூடிய உடலையே நான் என்று கருதியபோது உணர்ச்சிவயப்பட்ட நிலையில் துன்புற்றேன்.

உடலுக்குள் உயிர். உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே நானாகவும், நீயாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

கர்ம வினைப் பதிவுகளைக் கழித்து ஆன்மாவைத் தூய்மை செய்து கொள்வதற்காகவே உடலெடுத்து நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளேன்.

## துணைநின்ற நூல்கள்.


1. பாரதியார் பாடல்கள், உமா பதிப்பகம், சென்னை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. இணையதள தகவல்கள்.
4. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞாலம் போற்றும் ஞானிகள், மன்னார்குடி பானுகுமார், விஜய பதிப்பகம், கோவை
7. பாரதியார் பாடல்கள், பாரதியார் இணையதளம்